① பிருந்தா அவர்களின் 3/4/68 கடிதத்தின் 4 வது கேள்வியின் பதில்கள்.

1st copy?

1. சோளி ஆசாரிகள் ஜாதியில் கல்யாணத்தின் பொழுதோ (பிராமணர் சீர் போல) இறப்பின் பொழுதோ தண்ணீர் வைப்பது வார்க்கும் சீர் ஒரே மாதிரிதான் மாற்றம் கிடையாது. தவிர, இவர்கள் 9 பானை தண்ணீர் எந்த சீருக்கும் உபயோகிப்பதில்லை. இறப்பு சீரின்போது பிணத்தை குளிப்பாட்டுவதற்கு மட்டும் எல்லோரையும் போல் மூன்று குடம் தண்ணீர் உபயோகிக்கிறார்கள். மற்ற எந்த சீருக்கும் தண்ணீர் இத்தனை குடம் என்பது கணக்கு இல்லை. மேற்கண்ட ஜாதியிலும் வெள்ளைச்சாதம், செஞ்சாதம் சுற்றிப் போட்டு தண்ணீர் வார்ப்பதில்லை, ஆக்கை போட்டும் தண்ணி வார்ப்பதில்லை. நிறைநாழியும் சுத்துவதில்லை. ஆகவே பிராமணர் சீரின்போது தண்ணி வார்க்கும் சீரும் சோளி ஆசாரி சீரின் போது தண்ணி வார்க்கும் சீரும் ஒரே மாதிரிதான்.

2. கொங்கு ஆசாரி கல்யாணத்தின் போது பெண்மாப்பிள்ளைக்கு தண்ணி வார்க்கும் போது செஞ்சாதம், வெள்ளைச்சாதம் இவைகள் கவுண்டர் சீர்கள் போல் சுற்றிப்போட்டு தண்ணி வார்ப்பார்கள். ஆனால், இந்த ஜாதியிலும் ஆக்கை, நிறைநாழி இரண்டும் உபயோகிப்பதில்லை.

இறப்பு சீரின் போது கொள்ளிவைத்தவனுக்கும் பட்டு போட்டவர், கோடி போட்டவர், எண்ணெய்பூ போட்டவன் இவர்களுக்கு எல்லாம் கவுண்டர்கள் சீர் போலவே தண்ணி வார்க்கப்படுகிறது. மற்றபடி இவர்கள் சீரிலும் 9 பானை (குடம்) தண்ணீர் எந்த சீருக்கும் உபயோகிப்பதில்லை.

3. உடையார் ஜாதியில் கல்யாணத்தின் போது பெண் மாப்பிள்ளை இருவரையும் சேர (ஒரே நேரத்தில்) பக்கமாக கிழக்கு முகமாக உட்கார வைத்து தண்ணி வார்ப்பார்களாம். செஞ்சாதம் வெள்ளைச் சாதம் கவுண்டர்கள் சீர் போலவே சுற்றிப்போட்டு தண்ணி வார்ப்பார்கள். ஆனால், ஆக்கை நிறைநாழி இரண்டும் உபயோகிப்பதில்லை.

இறந்த சீரின் போது கொள்ளிவைத்தவனுக்கும் மற்றவர்களுக்கும் தண்ணீர் வார்ப்பதற்கு சீர் ஒன்றுமில்லை. அவர்கள் சவத்தை அடக்கம் செய்து விட்டு வீட்டுக்கு வந்து சும்மா தலைக்கு எண்ணெய், அரப்பு தேய்த்து தண்ணி வார்த்துக் கொள்வார்கள். இவர்களிலும் 9 பானை தண்ணீர் எந்த சீருக்கும் உபயோகிப்பதில்லை.

4. நாயக்கர் ஜாதியில் பெண் மாப்பிள்ளை இருவரையும் ஜோடியாக கிழக்கு முகமாக உட்கார வைத்து பெண்ணுடைய சேலை முனையையும், மாப்பிள்ளையின் வேஷ்டியின் முனையையும் சேர்த்து ஒன்றாக முடிந்து விட்டு தண்ணீர் வார்ப்பார்கள். இவர்களுக்கு வெள்ளைச் சாதம், செஞ்சாதம் சுத்திப் போட்டு தண்ணீர் வார்ப்பார்கள். நிறைநாழி இல்லை. ஆனால் பெண் மாப்பிள்ளை இருவருக்கும் வார்க்கும் தண்ணீரில் ஆத்திமரத்தின் இலையை கொஞ்சம் உள்ளே போட்டு அந்தத் தண்ணீரை பெண் மாப்பிள்ளைக்கு வார்ப்பார்கள். இதை இவர்கள் "ஆக்கை போட்டு தண்ணீர் வார்ப்பது" என்று சொல்கிறார்கள்.

மற்றபடி இறந்த சீரின்போது கொல்லிவைத்தவருக்கும் மற்றவர்களுக்கும் தண்ணீர் வார்க்கும்போது சீர் ஒன்றுமில்லை. சும்மா வீட்டில் வந்து நெய், அரப்பு தலைக்குத் தேய்த்து தண்ணீர் வார்த்துக் கொள்ளவேண்டியதுதான்.

தவிர இவர்களிலும் எந்த சீரிலும் 9 பானை தண்ணீர் உபயோகிப்பதில்லை. பிணத்தை குளிப்பாட்டுவதற்கு எல்லோரையும் போல் மூன்று குடம் தண்ணீரை உபயோகிக்கிறார்கள்.

5. கோமுட்டி செட்டியார் ஜாதியில் முகூர்த்தம் நடப்பதற்கு முன்பே பெண், மாப்பிள்ளை இருவரையும் இவர்களுடைய அப்பா, அம்மா நான்குபேர் ஆகமொத்தம் ஆறுபேரையும் மணவறையில் கிழக்கு முகமாக உட்கார வைத்து, வயதான சுமங்கலிப் பெண் ஒருவள் வந்து இவர்கள் ஆறுபேருக்கும் சந்தனம் பூசி, குங்குமப் பொட்டு வைத்து, பெண்கள் மூவருக்கும் தலையில் பூவைத்து பிறகு, எண்ணெயை கையில் தொட்டு ஆறுபேருடைய தலைகளிலும் துடைத்து விடுவாள். பிறகு அவர்கள் ஆறுபேரும் மணவறையை விட்டு எழுந்து சென்று குளிப்பார்கள். இவர்களில் பெண் சேலையையும், மாப்பிள்ளை வேஷ்டியையும் ஒன்றாக முடிந்து இருவரையும் ஜோடியாக உட்கார வைத்து தண்ணீர் வார்க்கும் சீர் இல்லை.

மற்றபடி இறப்பின் பொழுது தண்ணீர் வார்க்கும் சீர் பிராமணர் சீர் போலவே நடைபெறும். இவர்களிலும் 9 பானை தண்ணீர் எந்த சீருக்கும் உபயோகிப்பதில்லை. பிணத்தை குளிப்பாட்டுவதற்கு மூன்று குடம் தண்ணீர் தான்.

6. வடுகவண்ணான் சாதியில் கல்யாணத்தின்போது முகூர்த்தம் முடிந்த பின்பு பெண், மாப்பிள்ளை இருவரையும் கிழக்கு முகமாக உட்கார வைத்து, பெண்ணின் சீலை முனையையும், மாப்பிள்ளையின் வேஷ்டி முனையையும் சேர்த்து முடிபோட்டு கவுண்டர் சீர்கள் போல் வெள்ளைச்சாதம், செஞ்சாதம் சுற்றிப்போட்டு தண்ணீர் வார்ப்பார்கள். நிறைநாழி, ஆக்கை இரண்டும் இல்லை.

செத்த சீரின்போது கொள்ளிவைத்தவனுக்கும், மற்றவர்களுக்கும் கிணற்றடியில் தண்ணீர் வார்ப்பதில்லை. சீலை இல்லை. ~~சும்மா~~ வீட்டுக்கு வந்து சும்மா தலைக்கு நெய் அரப்புத்தேய்த்து தண்ணீர் வார்த்துக் கொள்வார்கள். இவர்கள் ஜாதியிலும் புனித தண்ணீர் என்றகணக்கு எந்த சீருக்கும் கிடையாது. பிணத்தை குளிப்பாட்டுவதற்கு எல்லா ஜாதியைப் போல் மூன்று குடம் தண்ணீர்தான்.

7. நாடார் கல்யாணத்தின் போது முகூர்த்தம் முடிந்தபிறகு பெண், மாப்பிள்ளை ~~இருவரையும் கிழக்கு முகமாக முக்காலிமேல் உட்கார வைத்து~~ இருவருக்கும் வண்ணானிடம் சீலை, வேஷ்டி வாங்கிக் கொடுத்து கட்டச் செய்து, அவர்கள் இருவரையும் கிழக்கு முகமாக முக்காலிமேல் உட்காரவைத்து மாப்பிள்ளையின் வேஷ்டியின் ஒரு முனையை எடுத்து பெண்ணின் இடுப்பில் சொருகி விடுவார்கள். அதேபோல் பெண்ணின் முந்தானை சீலையின் ஒரு முனையை மாப்பிள்ளையின் இடுப்பில் சொருகி விடுவார்கள். பிறகு, மாப்பிள்ளையின் தங்கை அல்லது ~~கொழு~~ கொழுந்தி யாராவது ஒருவள் வந்து ~~ஒரு சாப்பிடும் Plate~~ சாப்பிடும் வட்டல் (Plate) ஒன்றை எடுத்து மாப்பிள்ளையின் வலது பக்கம் தோளில் கைமேல் வைத்து பிடித்துக் கொள்வார்கள். இதே போல் பெண்ணுக்கு தங்கை கொழுந்தி ஒருவள் வந்து ஒரு வட்டலை எடுத்து பெண்ணின் இடதுபக்கம் தோள்பக்கம் கைமேல் வைத்து பிடித்துக்கொள்வாள். பிறகு ~~பெண்ணின் கையில்~~ யாரோ ஒரு பெண் ஒரு சொம்பில் தண்ணீர் எடுத்து பெண்ணின் கையில் கொடுப்பாள். அந்தத் தண்ணீரை மணப்பெண் வாங்கி மாப்பிள்ளையின் மேல்வைத்து பிடித்திருக்கும் வட்டலின் மேல் ஊத்துவாள். இதே மாதிரி மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றுவாள்.

பிறகு, மாப்பிள்ளையிடமும் தண்ணீர் எடுத்துக் கொடுப்பார்கள் அவர் அந்தத்தண்ணீரை வாங்கி பெண்ணின் கைமேல்

3.4.68 கடிதத்தின் கேள்வி பதில்.

வைத்துப் பிடித்திருக்கும் வட்டலின் மேல் ஊற்றுவார். அவளும் மூன்று சொம்பு தண்ணீர் ஊற்றவேண்டும். பிறகு இவர் இருப்பதும் சொருகிவிட்ட சீலையையும், வேஷ்டியையும் எடுத்து விடுவார்கள். ~~பிறகு பெண்ணையும், மாப்பிள்ளையும்~~ பிறகு, பெண்ணையும், மாப்பிள்ளையும் எப்பவும் குளிப்பதுபோல் சாதாரணமாக குளித்துக் கொள்ளுவார்கள் வேறு சீர் இல்லை.

சிறப்பு. சீர்களின் போது கொல்லிவைத்தவனுக்கும், மற்றவர்களுக்கும் தண்ணீர் வார்ப்பதற்கு சீர்கள் ஒன்றும் செய்வதில்லை. தலைக்கு நெய், அரப்பு கொஞ்சம் தடைத்து கிணற்றிலோ, வீட்டிலோ தண்ணீர்வாத்துக் கொள்வார்கள். இவர்களில் ஜனத்தை இளிப் பாட்டவதற்கு 3 குடம் தண்ணீரே உபயோகிக்கிறார்கள். தவிர இவர்கள் தாழியிலும் எந்த சீருக்கும் 9 பானை(குடம்) தண்ணீர் உபயோகிக்கப் படுவதில்லை. இவர்களில் ஆக்கை, நிறை நாழி உபயோகிப்பதில்லை.

8. முதலியார் ஜாதியில் முகூர்த்தத்திற்கு முன்பு பெண், மாப்பிள்ளையை குளிக்கவைப்பது கவுண்டர்கள் கல்யாணங்கள் போலவே வெள்ளைச்சாதம், சிகப்புச்சாதம் இவைகள் எல்லாம் சுத்திப் போட்டு தண்ணிவாக்கிறார்கள். மாப்பிள்ளைக்கு ஆக்கை போட்டும் தண்ணிவாக்கிறார்கள். இவர்களில் நிறைநாழியும் உபயோகிக்கிறார்கள்.

ஆனால், முகூர்த்தம் முடிந்தபிறகு பெண், மாப்பிள்ளை இவ்வெருவரையும் முக்காலிகள் மேல் இவ்வெருவரையும் ஜோடியாக உட்கார வைத்து பெண்ணுடைய சீலை முந்தானை முனையையும், மாப்பிள்ளையின் வேஷ்டி முனையையும் ஒன்றாகச் சேர்த்து முடிந்துவிட்டு, அண்டாவில் இருக்கும் தண்ணீரில் கொஞ்சம் மஞ்சத்தூள் போட்டு கலந்து வைத்து, ~~சொம்பில~~ பெண்ணின் கையில் சொம்பால் தண்ணி மோந்து (எடுத்து) கொடுப்பார்கள். அந்த பெண் வாங்கி மாப்பிள்ளையின் மேல் ஊற்றுவாள். இப்படியே மூன்று சொம்பு தண்ணீர் மாப்பிள்ளை மேல் மணப்பெண் ஊற்றுவாள். பிறகு, மாப்பிள்ளையிடமும் சொம்பில் தண்ணி மோந்து கொடுத்து மணப்பெண் மேல் ஊத்தச் செய்வார்கள். அவனும் மூன்று சொம்பு தண்ணீர் ஊத்துவான். பிறகு, வெள்ளைச்சாதம், செஞ்சாதம் இவைகள் இருவருக்கும் சுத்திப் போட்டு தண்ணிவாப்பார்கள்.

பிறகு ஒன்றாக சேர்த்து கட்டியிருக்கும் சீலையையும் வேஷ்டியையும் அவிழ்த்து விட்டு, பெண் மாப்பிள்ளையை வீட்டுக்குள் அழைத்துச் செல்வார்கள்.

இறப்பு சீரின் போது கொல்லி வைத்தவருக்கும், மற்றவர்களுக்கும் தண்ணீர் வார்ப்பது கவுண்டர்களின் சீர்கள் போலவே வெள்ளைச்சாதம், செஞ்சாதம் சுத்திப்போட்டு தண்ணீர் வார்க்கப்படுகிறது. இவர்களிலும் இறப்பாட்டுவதற்கு மூன்று குடம் தண்ணீரை உபயோகிக்கிறார்கள்.

இவர்களிலும் 9 பானை தண்ணீர் உபயோகிக்கும் சீர்கள் ஒன்றுமில்லை.